செய்தி வெளியீடு எண். 29-2019 நாள்: 08.11.2019

**விழுப்புரம் மாவட்டம் பொதுப்பணித்துறை (நீர்வள ஆதாரதுறை) சார்பாக கோமுகி அணையிலிருந்து விவசாய பாசனத்திற்காக மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள், சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் துறை அமைச்சர் திரு.சி.வி.சண்முகம் அவர்கள் தண்ணீர் திறந்து வைத்தார்.**

*****

விழுப்புரம் மாவட்டம் பொதுப்பணித்துறை (நீர்வள ஆதாரதுறை) சார்பாக மணிமுக்தா அணை மற்றும் கோமுகி அணையிலிருந்து விவசாய பாசனத்திற்காக, மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள், சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் துறை அமைச்சர் திரு.சி.வி.சண்முகம் அவர்கள் இன்று (08.11.2019) தண்ணீர் திறந்து வைத்தார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவின்படி, இன்றைய தினம் கோமுகி அணையிலிருந்து விவசாய பாசனத்திற்காக தண்ணீர் திறந்துவிடப்பட்டது.

விழுப்புரம் மாவட்டம் சின்னசேலம் வட்டம் கோமுகி அணையின் மொத்த நீர்மட்டம் 46.00அடி. இதன் மொத்த கொள்ளளவு 560.96 மி.க.அடி. அணையின் தற்போதைய நீர் மட்டம் 44 அடி. கொள்ளளவு 489.56 மி.க.அடி. 08.11.2019 முதல் 22.11.2019 வரை பழைய பாசன ஆற்றில் வினாடிக்கு 60.00 கன அடி நீரும், புதிய பாசன வாய்க்காலில் வினாடிக்கு 50.00 கன அடி நீரும் திறந்துவிடப்படும். 23.11.2019 முதல் 06.01.2019 வரை பழைய பாசன ஆற்றில் வினாடிக்கு 120.00 கன அடி நீரும், புதிய பாசன வாய்க்காலில் வினாடிக்கு 100.00 கன அடி நீரும் திறந்துவிடப்படும்.

கோமுகி அணையிலிருந்து தண்ணீர் திறப்பதனால், வடக்கனந்தல், சோமண்டார்குடி, ஏமப்பேர், கள்ளக்குறிச்சி, தென்கீரனூர், நீலமங்கலம், குரூர், பொரசக்குறிச்சி, விருகாவூர், நாகலூர், வேளாக்குறிச்சி ஆகிய அணைக்கட்டுகளில் நீர் சென்றடையும். விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள வடக்கனந்தல், சோமண்டார்குடி, மாதவச்சேரி, செம்படாக்குறிச்சி, மட்டிகைகுறிச்சி, ஏர்வாய்ப்பட்டினம், க.அலம்பலம், ஏமப்பேர், தச்சூர், விளம்பார், கள்ளக்குறிச்சி, மலைக்கோட்டாலம், க.மாமனந்தல், தென்கீரனூர், நீலமங்கலம், குரூர், முடியனூர், விருகாவூர், பொரசக்குறிச்சி, வரஞ்சரம், வேளாக்குறிச்சி, கடத்தூர், நல்லாத்தூர், குதிரைச்சந்தல், காரனூர், தென்செட்டியேந்தல், சின்னசேலம், பைத்தந்துறை, எலியத்தூர், தொட்டியம், பங்காரம், தெங்கியாநத்தம், நாகலூர் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த பழைய பாசன நிலங்களான 5860 ஏக்கர் நிலப்பரப்பு பாசன வசதி பெறும். மேலும், வடக்கனந்தல், மாத்தூர், மண்மலை, மாதவச்சேரி, பால்ராம்பட்டு, செல்லம்பட்டு,

கரடிசித்தூர் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த புதிய பாசன நிலங்களான 5000 ஏக்கர் நிலப்பரப்பு பாசன வசதி பெறும்.

மேற்குறிப்பிட்டுள்ள விவரப்படி தண்ணீர் திறக்கப்படும் நாளில் இருந்து தற்போதைய நீர் இருப்பைக் கொண்டு 60 நாட்கள் வரை தண்ணீர் பாசனத்திற்கு வழங்க இயலும். மேலும், நீர்வரத்திற்கேற்ப தண்ணீர் பாசன காலம் வரை (ஜனவரி மாதம் வரை) தொடர்ந்து வழங்கப்பட உள்ளது. எனவே, பாசன விவசாயிகள் தண்ணீரை வீணடிக்காமல் சிக்கனமாக பயன்படுத்தி அதிக வருவாய் பெற வேண்டுமென மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள், சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் துறை அமைச்சர் திரு.சி.வி.சண்முகம் அவர்கள் கேட்டுக்கெண்டார்.

இந்நிகழ்ச்சிகளில், கூடுதல் ஆட்சியர் திருமதி.ஸ்ரேயா.பி.சிங்.இ.ஆ.ப., கள்ளக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் திரு.அ.பிரபு, முன்னாள் அமைச்சர் திரு.ப.மோகன், தமிழ்நாடு சர்க்கரை ஆலை இணைய தலைவர் திரு.ஏ.எஸ்.ஏ.ராஜசேகர், பொதுப்பணித்துறை (நீர்வள ஆதாரத்துறை) செயற்பொறியாளர் திரு.மணிமோகன், உதவி செயற்பொறியாளர் திரு.முருகவேல், உதவி பொறியாளர்கள் திரு.பிரபு, திரு.கணேசன், திரு.நாராயணன் மற்றும் பாசன சங்கத் தலைவர்கள், உறுப்பினர்கள், விவசாயப் பெருமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

---

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், விழுப்புரம்.